**தலைப்பு – 139 கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அவ் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு**

இந்த அறிக்கை இரண்டு பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

I ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அவ்அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## பகுதி I

**கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை**

**1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்**

| தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 290 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் |

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவும்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள ஒரு திணைக்களத்துக்காக ஏற்பாடுசெய்யப்பட்ட மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 3,875,798,227 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் அதில் ரூபா

2,985,926,668 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க அமைச்சு மற்றும் திணைக்களத்தின் மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் சேமிப்பு முறையே ரூபா 837,441,697 இற்கும் ரூபா 52,429,862 இற்கும் இடைப்பட்ட வீச்சுடைய அளவில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதத்திற்கும் 10 சதவீதத்திற்கும் இடைப்பட்ட அளவில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்படுகின்றன.

| | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேறிய நிதி ஏற்பாடு** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்பாடு** | | **2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேமிப்பு** | |
|---|---|---|---|---|---|---|---|
| **தலைப்பு** | **அமைச்சு / திணைக்களம்** | **மீண்டு வருபவை** | **மூலதனம்** | **மீண்டு வருபவை** | **மூலதனம்** | **மீண்டு வருபவை** | **மூலதனம்** |
| | | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| 139 | கடற்றொழில் மற்றும் நீரியல் வழங்கள் அபிவித்தி அமைச்சு | 597,023,570 | 2,746,949,657 | 576,025,003 | 1,930,506,527 | 20,998,567 | 816,443,130 |
| 290 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 448,625,000 | 83,200,000 | 443,144,638 | 36,250,500 | 5,480,362 | 46,949,500 |
| | மொத்தம் | **1,045,648,570** | **2,830,149,657** | **1,019,169,641** | **1,966,757,027** | **26,478,929** | **863,392,630** |

**(இ) ஏனைய அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் வழங்கப்பட்ட நிதி ஏற்பாடுகளின் பயன்பாடு**

பல்வேறு செயற்பாடுகளுக்காக ஏனைய அமைச்சுக்கள் / திணைக்களங்களிற்கு பின்வருமாறு ரூபா 145,527,020 கூட்டுமொத்த தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபரம் கீழே தரப்படுகின்றன.

| அமைச்சு | பெறப்பட்ட நிதி ஏற்பாடு | உள்ளபடியான செலவு | சேமிப்பு (2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு) | சேமிப்பு தொடர்பான அவதானிப்பு பொழிப்பாக |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | |
| அரச பாதுகாப்பு அமைச்சு | 2,205,020 | 2,205,020 | - | - |
| பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 143,275,000 | 119,443,000 | 23,832,000 | திவிநெகும செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காகப் பெறப்பட்டிருந்த ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் இறுதியில் எஞ்சியிருந்த ரூபா 23,832,000 தொகை அவ் அமைச்சின் அறிவிப்பில் மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| மாவட்ட செயலகம் - களுத்துறை | 47,000 | 22,000 | 25,000 | பட்டதாரி பயிலுனர்களுக்கு சம்பளக் கொடுப்பனவிற்காக வழங்கப்பட்டிருந்த தொகையில் எஞ்சியிருந்த தொகை மீள அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. |
| மொத்தம் | 145,527,020 | 121,670,020 | 23,857,000 | |

## 2.2 வருமானக் கணக்குகள்

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அமைச்சின் கீழுள்ள கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் 2012 ஆம் ஆண்டின் போது வருமானக் குறியீடு 1 இற்காக ரூபா 6 மில்லியன் தொகையான வருமான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வருமானமாக ரூபா 4.5 மில்லியன் தொகை

சேகரிக்கப்பட்டிருந்தது. இதன் படி, மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 75 சதவீத வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் | வருமானக் குறியீடு | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடி வருமானம் | குறைவாகச் சேகரிக்கப் பட்டவை | சதவீதம் |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் பணிப்பாளர் நாயகம் | 10-03-07-06 | 6,000,000 | 4,504,500 | 1,495,500 | 25 |

## 2.3 முற்பணக் கணக்குகள்

### 2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

#### (அ) பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்கு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளிற்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன. விபரங்கள் பின்வருமாறு காணப்பட்டன.

| தலைப்பு | விடய இல. | செலவுகள் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | உச்ச எல்லை | உள்ள படியானது | ஆகக்குறைந்த எல்லை | உள்ள படியானது | உச்ச எல்லை | உள்ள படியானது |
| 139 | 13901 | 6,300,000 | 4,320,580 | 3,800,000 | 4,808,523 | 38,000,000 | 25,040,521 |
| 290 | 29001 | 19,000,000 | 10,164,627 | 14,000,000 | 18,296,101 | 112,000,000 | 70,221,494 |

## 2.4 கட்டு நிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

### (அ) கட்டு நிதிக் கணக்குகள்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கட்டுநிதி கணக்குகளில் ரூபா 85,914,525 தொகையான வரவு மீதி காணப்பட்டது.

### (ஆ) பொதுவைப்புக் கணக்குகள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொது வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 49,044,907 கூட்டுமொத்த தொகை காணப்பட்டதுடன் அது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு / திணைக்களம் | கணக்கு இலக்கம் | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 6000/0000/00/0015/0051/0001 | 17,727,148 |
| | 6000/0000/00/0015/0051/0003 | 7,413,406 |
| | 6000/0000/00/0015/0051/0004 | 15,200,641 |
| கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம் | 6000/0000/00/0015/0145/000 | 7,701,287 |
| | 6000/0000/00/0006/0073/000 | 1,002,425 |
| கூட்டுத்தொகை | | 49,044,907 |

# 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பிற்குமான விபரமான அறிக்கை

## ஒதுக்கீட்டுத் தலைப்பு 139 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 26 ஆந் திகதி அமைச்சு செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வைப்பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினா் ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச்

சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இங்கே (அ) இலிருந்து (உ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.12 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பாதீட்டு முரண்

(i) 02 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பு அதே செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய ஏற்பாட்டில் 99 சதவீத அளவைக் கொண்டிருந்தது.

(ii) 10 செலவின விடயங்களுக்காக குறை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தமையால் நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் வேறு செலவின விடயங்களிலிருந்து ஏற்பாடு மாற்றப்பட்டிருந்ததுடன் இது மூல மதிப்பீட்டில் 24 சதவீதத்திலிருந்து 152 சதவீதம் வரையான அளவைக் கொண்டிருந்தது.

**(ஆ) பாதீட்டு உதவிச் சேவை திடீர் தேவைப்பாட்டு பொறுப்பு செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட ஏற்பாடு**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் அழகு மீன் வளர்ப்பு அபிவிருத்திச் செயற்திட்டச் செலவின விடயங்களுக்காக நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் ரூபா 14,000,000 தொகையும் குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடு மூலம் ரூபா 30,000,000 தொகையுமாக ரூபா 44,000,000 தொகையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 29,997,210 தொகையான அதாவது 68 சதவீதம் மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) கட்டு நிதிக் கணக்கு**

(i) 2012 ஏப்ரல் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட வேண்டிய எனினும், 2013 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் அமைச்சு தீர்த்து வைத்திராத கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 78,877,800 ஆகக் காணப்பட்டது.

(ii) இக் கட்டுநிதி கணக்கு மீதிகளில் இலங்கை கடற்றொழில் கூட்டுத்தாபன மீன்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் வேறு நாளாந்த செலவினத்திற்காக 2010 நவம்பர் 05 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 10,000,000 தொகை 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தீர்க்கப்படாத முற்பண மீதிகள் காணப்பட்டன.

(iii) 2012 நவம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் புத்தகங்களின் படி, கட்டுநிதி மீதி ரூபா 85,914,524 தொகையாகக் காணப்பட்ட போதிலும் திறைசேரிப் புத்தகங்களின் படி, இது ரூபா 85,402,341 தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, ரூபா 512,183 தொகையான வேறுபாட்டை இனங்கண்டு சீராக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

(i) 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சுப் புத்தகங்களின் படி, வைப்புக் கணக்கு மீதி ரூபா 40,341,195 ஆகக் காணப்பட்டதுடன் திறைசேரிப் புத்தகங்களின் படி மீதி ரூபா 39,829,012 தொகையாகக் காணப்பட்டது. அம் மீதியில் ரூபா 512,183 தொகையான வேறுபாடு தொடர்பாக இணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) பயன்பாட்டிலிருந்து விலக்கப்பட்ட வாகனங்களை விற்பனை செய்கையில் பெறப்பட்டிருந்த ரூபா 85,817 தொகை மீளச் செலுத்தப்படாத கேள்வி வைப்புகள் அரசாங்க வருமானத்திற்கு எடுத்துக்கொள்ளப்படாது பொது வைப்புக் கணக்கில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

(i) 13901 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக்கூற்றின் பிரகாரம், அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட கடன் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,199,409 தொகையானதுடன் அந் நிலுவை மீதிகளை அறவீடு தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1.6 ஆம் பிரிவு மற்றும் 2004 ஒக்டோபர் 11 ஆம் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு முரணாக 1987 முதல் 1994 வரையான 25 ஆண்டுகளைப் பார்க்கிலும் அதிக காலமாக நிலவிவரும் இடமாற்றலாகிச் சென்ற 14 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதித்

தொகையான ரூபா 153,526 தொகையைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.8 ஆம் பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தரின் கடன் மீதி முழுதும் கொடுப்பனவு செய்துமுடியும் வரை அவர் அரச கூட்டுத்தாபனத்தின் கடமைக்காக முற்றாக விடுவிக்கப்படலாகாததுடன் உத்தியோகத்தர் விடுவிக்கப்படுவதன் முன்னர் அவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவது தொடர்பாக அவரை விடுவிக்கும் திணைக்களம் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் முற்பணக் கணக்கில் 07 உத்தியோகத்தர்களுக்கு உரித்தாக அறவிட வேண்டிய நிலுவைக் கடன் மீதி ரூபா 295,627 ஆகக் காணப்பட்டது.

(iv) மேற்குறித்த கடன் மீதியில் உள்ளடக்கப்பட்ட கூட்டுத்தாபன கடமைகளுக்காக விடுவிக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களுக்கு உரித்தான ரூபா 166,933 கூட்டுத்தொகையான முற்பணக் கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ள கடன் மீதி ரூபா 235,598 ஆக கடன்பட்டோர் பேரேட்டில் ரூபா 68,664 கூட்டிக் காட்டப்பட்டிருந்தது. மேலும், 03 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 66,845 கூட்டுத்தொகையான கடன் மீதிகளுக்கு உரித்தான 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளின் போது அறவிடப்படாதிருந்த தவணைகளை அறவிடுவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் 4.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வு பெறுவதற்குள்ள உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடன் தொகையை மீள அறவிடுவதற்கு இடமளிக்கப்பட்டு உத்தியோகத்தரின் விருப்பிற்கிணங்க குறித்த தவணைகளைப் பார்க்கிலும்

குறைவான தவணைகளில் கடன் அறவிடப்படுவதற்கோ அல்லது ஒன்றிணைந்த ஓய்வூதியத்திலிருந்து அறவிடப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையால் 1985 முதல் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது ஓய்வு பெற்ற 37 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 134,433 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டது.

(vi) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 ஆம் பிரிவின் பிரகாரம் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகை முற்றாக அறவிடப்படுவதற்கு முன் உத்தியோகத்தர் மரணமடைந்தால் அவரிடமிருந்து அறவிடுவதற்குள்ள சகல பணத்தொகையும் அவரின் உரித்தாளிகளுக்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து கழித்துக்கொண்டு அல்லது உரித்தாளரிமிருந்து அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 1986 முதல் 1995 வரையான காலப்பகுதியின் போது இறந்த 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 62,569 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vii) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4.1 ஆம் 4.5 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணம் பிரதான கடன்பெறுனரிடமிருந்து அறவிடப்பட முடியாத சந்தர்ப்பங்களின் போது அவர் தொடர்பாக பின்பற்ற வேண்டியதாக விதந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பிணையாளி தொடர்பாகவும் பின்பற்றி கடன் தொகையை அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 27 ஆண்டு காலப்பகுதியின் போது அறவிடப்படாது முன்கொண்டு வரப்படும் சேவையை விட்டுச் சென்ற 24 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 665,471 தொகையான கடன் மீதி தொடர்பாக அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

(viii) தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் பிரிவின் பிரகாரம் எவரேனும் ஓர் உத்தியோகத்தரின் சேவை முடிவடைந்தது என கருதும் சந்தர்ப்பங்களில் குறைந்த தவணைகளில் அப் பணத்தொகையை அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 1994 ஆம் 1995 ஆம் ஆண்டுகளின் போது அமைச்சரவை தீர்மானத்தின் அடிப்படையில் சேவையை முடிவுறுத்*தியிருந்த* அமைச்சரின் அந்தரங்கப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 04 பேரிடமிருந்து அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 78,754 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக் கடன் மீதிகளை பிணையாளிகளிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்காகவும் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்புப் பொறுப்பும்

### 1.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆம் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான ஒரு பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்தக் கொள்வனவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்தக் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் இது 2006 மார்ச் 24 ஆம் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டின் கொள்வனவு நடவடிக்கைகள் அத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்ததுடன் இதன் மூலம் வருடத்தின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 22 பரிசோதனைச் செயற்பாடுகளில் 15 செயற்பாடுகள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சினால் அமைச்சிடமிருந்த 07 வாகனங்கள் முறையற்ற விதத்தில் வெளித்தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. விபரம் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| வாகனங்கள் வழங்கப்பட்டுள்ள நிறுவனம் | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|
| இலங்கை மீன்பிடிக் கூட்டுத்தாபனம் | 03 |
| வரையறுக்கப்பட்ட சீனோர் மன்றம் | 03 |
| வடமேல் மாகாண தலைமைச் செயலாளர் | 01 |
| | 7 |

(ஆ) தீர்க்கப்படாத பொறுப்புகள்

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள ஏனைய நிறுவனங்களில் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ் ஆண்டிற்கு உரித்தான தீர்க்கப்படாத பொறுப்புகள் ரூபா 423,240,621 ஆகக் காணப்பட்டன.

## 1.6 செயற்திட்ட அமுலாக்கத்திலான நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பூர்த்திசெய்யப்பட்ட வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களின் நோக்கத்தை எய்தி அவற்றின் சொத்துக்களை ஒப்படைப்பது தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படாமை.

பின்வரும் வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்துகொள்வதற்கும் செயற்திட்டங்களுக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் ஒப்படைத்தல் தொடர்பான அறிக்கை 2013 திசெம்பர் 31 வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **செயற்திட்டம்** | **செயற்திட்டம் பூர்த்திசெய்யப்பட்ட திகதி** |
|---|---|
| சுனாமியால் பாதிப்பிற்குள்ளாகிய பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் செயற்திட்டம். | 2010.12.31 |
| கரையோர வள முகாமைத்துவ செயற்திட்டம் | 2009.06.30 |
| சுனாமியின் பின்னரான வாழ்வாதார உதவி ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டம் | 2011.09.30 |

(ஆ) திக்கோவிட்ட மீன்பிடிப்புத் துறைமுகச் செயற்திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) செயற்திட்ட வாகனங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்கள் கண்டறியப்பட்டன.

- செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படுகையில் அவற்றிற்கு உரித்தான சொத்துக்கள் உரிய அமைச்சுச் செயலாளருக்கு ஒப்படைக்கப்படுவதாயினும், திக்கோவிட்ட மீன்பிடிப்புத் துறைமுகச் செயற்திட்டத்திற்கு உரித்தான 07 வாகனங்கள் அரச கம்பனியொன்றின் பதில் தலைவரால் முறையான அதிகாரம் இன்றி நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன.

- 2013 திசெம்பர் 31 ஆம் திகதியில் செயற்திட்டத்தின் பயன்பாட்டிற்காக மாதமொன்றிற்கு ரூபா 63,000 தொகைப் படி வாடகை செலுத்தி ஓர் மோட்டார் வாகனம் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

- மீன்பிடிப்புத் துறைமுகத்திற்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 4,240,000 பெறுமதியான 5 தொன் டிரக் ரூபா 1,416,100 பெறுமதியான எரிபொருள் பவுசரினதும் உரிமை கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சிற்கு உரித்தானதாக இருக்க வேண்டிய போதிலும் உரிய கொள்வனவை மேற்கொண்ட அரச கம்பனி அவ் வண்டிகளின் உரிமையாளராக குறிப்பிட்டு பதிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) செயற்திட்டத்தின் நோக்கங்களுக்கு மாறாக நடவடிக்கை மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் கண்டறியப்பட்டன.

- திக்கோவிட மீன்பிடிப்புத் துறைமுகச் செயற்திட்டத்தின் செயற்பாடுகளுக்கு மாறாக ஓர் அரச கம்பனிக்கு உரித்தான மட்டக்குளியில் அமைந்துள்ள படகுகளின் தரத்தை உயர்த்துவதற்காக 08 சந்தர்ப்பங்களின் போது செயற்திட்ட நிதியத்திலிருந்து ரூபா 34,059,911 வழங்கப்பட்டிருந்தது.

- அப் படகுகளைத் திருத்தும் களத்தின் உத்தரவாத காலத்துடன் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 876,450 தொகையான 13

உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிராததுடன் ரூபா 173,901 பெறுமதியான 02 உபகரணங்கள் அவ்வளாகத்தில் காணப்படவில்லை.

(iii) அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 1.2.1 வழிகாட்டலின் படி கொள்வனவு நடவடிக்கைகள் உச்சப் பொருளாதார ரீதியிலும் ஆகக் குறைந்த கிரயத்துடனும் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் செயற்திட்டத்திற்குரிய பின்வரும் கொள்வனவு நடவடிக்கைகள் அரச கம்பனி ஒன்றினூடாக மேற்கொள்ளப்பட்டு உரிய கொள்வனவுகளின் விலைப்பட்டியல் பெறுமதி அக் கம்பனிக்கு கிடைக்கக்கூடிய வகையில் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. விபரம் பின்வருமாறாகும்.

| **கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள்** | **செலுத்தப்பட்ட மொத்தத் தொகை** | **விலைப்பட்டியல பெறுமதி** | **எல்லை** |
|---|---|---|---|
| | **ரூபா** | **ரூபா** | **ரூபா** |
| Matura Sur Composites France | 5,834,246 | 5,325,013 | 509,233 |
| உபகரணத் தொகுதி | 838,953 | 803,100 | 35,853 |
| உழவு இயந்திரம் | 4,452,000 | 4,240,000 | 212,000 |
| உழவு இயந்திரம் | 1,486,905 | 1,416,100 | 70,805 |
| பவுஸர் | 8,637,804 | 8,226,480 | 411,324 |
| | | | 1,239,215 |

இதன் படி மேற்குறித்த ரூபா 1,239,214 தொகையான கொடுப்பனவுகள் அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக்கு முரணாகவும் முறையான அதிகாரப் பொறுப்பும் இன்றி மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(iv) செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலை தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

- திக்கோவிட மீன்பிடிப்புத் துறைமுகச் செயற்திட்டத்தின் III ஆம் கட்டத்தின் கீழ் ரூபா 97,149,878 ( பெறுமதி சேர் வரி தவிர்ந்த) பெறுமதிக்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த இரு ஐஸ் தொழிற்சாலைகளில் ஒரு தொழிற்சாலையின் நிலத்திற்கு இடப்பட்டிருந்த கொங்கிரீட் தட்டின் குறைபாடு காரணமாக அவ் உற்பத்தித் தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்த முடியாதிருந்தது.

- ஐஸ் தொழிற்சாலையில் நிலவிய ரூபா 176,634 தொகையான Booster Pump இயந்திரமும் ஐஸ் தயாரிப்புப் பிரிவில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 1,752,920 தொகையான Hoist & Over Head Crane இயந்திரமும் 2013 யூன் மாதம் முதல் செயற்பாடற்றுக் காணப்பட்ட போதிலும் நிர்மாணிப்புகள் ஒப்பந்தத்தின் உத்தரவாதக் காலத்தினுள் உரிய ஒப்பந்தக்காரரால் அதனை பழைய நிலைக்குக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

- ஐஸ் தொழிற்சாலையில் 10 High Bay light பொருத்தப்பட்டிருக்கையில் அவ் 24 விளக்குகளைப் பொருத்துவதற்காக பணம் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

(v) செயற்திட்ட அபிவிருத்தியின் ஐ ஆம் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த Off Loading Building – Export Oriental கட்டிட செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காகப் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(vi) செயற்திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டிருந்த கழிவு நீர் மீள் சுழற்சி முறைமையின் செயற்பாடு ஸ்தம்பிதமாகி இருந்ததுடன் சேதனப் பசளை தயாரிப்பிற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த 03 கட்டிடங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டன.

(vii) துறைமுகத்தின் நுழைவு வீதி மற்றும் பால நிர்மாணிப்பிற்காகக் கிடைக்கப்பெற்றிருந்த 800,000 யூரோ வெளிநாட்டு உதவி ஏற்பாட்டின் மூலம் நுழைவு வீதியும் பாலமும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் பாலத்தை பிரதான வீதியுடன் இணைக்க முடியாது போனதன் காரணமாக அப் பாலம் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தன.

(viii) திக்கோவிட மீன்பிடிப்புத் துறைமுகச் செயற்திட்டத்தின் அடிப்படை நோக்கங்களிற்கு முரணாக அரச கம்பனி ஒன்றிற்கு அதன் நடவடிக்கை பேணிச் செல்வதற்கு 2012 ஆம் ஆண்டின் போது 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 33 மில்லியன் தற்காலிக முற்பணம் பெறப்பட்டிருந்ததுடன் இம் முற்பணத்திலிருந்து ரூபா 29,641,352 தொகை 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ix) செயற்திட்டத்தின் வருமான வரிப் பிணைப்பு தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டன.

- உடன்படிக்கையின் படி, திக்கோவிட மீன்பிடிப்புத் துறைமுகச் செயற்திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரரான Bam International B.V. நிறுவனத்தின் வரிப் பிணைப்பு கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சால் செலுத்தப்பட வேண்டியதுடன் அந் நிறுவனத்தின் 2009 ஆம் 2011 ஆம் ஆண்டுகளுக்குரிய வருமான வரி ரூபா 61,042,145 தொகையும் 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளுக்குரிய உழைக்கும் போதே செலுத்தும் வரியான ரூபா 57,460,597 தொகையும் அமைச்சினால் செலுத்தப்பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

- செயற்திட்டத்தின் நிதிக்கூற்றின் படி 2011 ஆம் ஆண்டின் போது முன்கொண்டுவரப்பட்ட ரூபா 30,000,000 தொகையான வருமான வரிப் பிணைப்பு 2012 ஆம் ஆண்டின் இறுதியிலும் செலுத்தப்பட்டிராமையால் இதற்கான தண்டப்பணக் கொடுப்பனவில் இடர் காணப்பட்டன.

(x) திக்கோவிட்ட மீன்பிடித் துறைமுக நிர்மாணிப்புச் செயற்திட்டத்தின் கணக்கு நடவடிக்கைகளுக்காக பேரேடு ஒன்று பேணப்பட்டிராததுடன் இறுதி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகையில் பரீட்சை மீதி தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(xi) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட Travel lift இயந்திரத்தின் ரூபா 3,998,891 தொகையான சுங்கக் கட்டணம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 செயலாற்றல்

2012 வருடாந்த பாதீட்டு மதிப்பீடு, கூட்டிணைந்த திட்டம் மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி அமைச்சின் முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

### (அ) போதியளவில் மேற்கொள்ளப்படாத செயற்பாடுகள்

2012 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட மீன்பிடி சமூக அபிவிருத்திப் பிரிவு (FSDD) இன் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பின்வரும் 4 செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) மீன்பிடி சமூகத்திற்காக விழிப்புணர்ச்சி மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள், புதிய மீன்பிடித் தொழிநுட்பம், பின்அறுவடை, விற்பனை மற்றும் மீன்பிடிச் சமூகத்திற்காக விற்பனை மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி.

(ii) மீன்பிடி சமூகத்தை நிறுவன ரீதியாக பலப்படுத்தல்.

(iii) சமூக சார் நன்னீர் மற்றும் நீர்வாழ் உற்பத்தி முறைகள்

(iv) மீன்பிடித் தொழிநுட்பம் மற்றும் சிறுவர் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்.

(ஆ) உபாயமார்க்க முகாமைத்துவத் திட்ட அமுலாக்கம் [ Implementation of stratergic Management system]

---

உத்தியோகத்தர்களின் பணி ஒப்படைப்பு மற்றும் செயற்பாடுகளை பரீட்சிப்பதற்காக இணையதள முகாமைத்துவ முறைமை ஒன்று (Web Based Dash Board System) ரூபா 5.65 மில்லியன் தொகையான செலவில் தாபிக்கப்பட்டிருந்தது. உரிய ஆலோசனை நடவடிக்கைகளையும் உபாயமார்க்கத் திட்டங்களையும் தாபிப்பதற்காக ஓர் தனியார் நிறுவகத்துடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டு 03 கட்டங்களுக்காக ரூபா 3.65 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. கணக்காய்வுத் திகதி வரையில் NAQDA நிறுவனம் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களுக்காக இவ் உபாயமார்க்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**1.8 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

---

**(அ) 02 தாய்ப்படகுகளைக் கொள்வனவு செய்தல்**

---

(i) 02 தாய்ப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சினால் 2007 ஆகஸ்ட் 15 ஆம் திகதி ஓர் சர்வதேச கம்பனி ஒன்றுடன் ஓர் உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி, 2008 பெப்ரவரி 15 ஆம் திகதி ரூபா 326 மில்லியன் பெறுமதியான 02 தாய்ப்படகுகள் அமைச்சிடம் ஒப்படைக்கப்படுவதற்கிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) மேற்குறித்த செயற்பாட்டிற்காக 2006 ஆம் ஆண்டு முதல் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி வரை திறைசேரியால் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 1,338,000,000 இல் தாய் படகைக் கொள்வனவு செய்வதற்கு உரித்தான முற்பணக் கொடுப்பனவும் கடன் பத்திர உருவாக்கல் ஆகிய விடயங்களுக்காக ரூபா 110,903,138 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதன் படி எஞ்சியிருந்த ரூபா 1,227,096,862 தொகையான ஏற்பாட்டில் ரூபா 541,018,038 தொகையான வேறு செலவின விடயங்களின் தேவைப்பாட்டிற்காக நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் மாற்றப்பட்டு செலவிடப்பட்டிருந்தன.

**(ஆ) காணாமற் போன உறுதிச்சீட்டுக்கள்**

அமைச்சின் கீழ் உள்ள தேசிய நீரியல் வள ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முகவரகத்திற்கு உரித்தான நிதிப் பிரமாணம் 272(2) இன் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படாது நிறைவேற்றாது ரூபா 151,729 பெறுமதியான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் காணாமற் போயிருந்தன.

## 1.9 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட சில கொடுக்கல்வாங்கல்கள் முறையற்றவையாகியிருந்தன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்.

**(அ) நன்னீர் படகுகளைக் கொள்வனவு செய்தல்**

i. நன்னீர் அபிவிருத்தி தீர்மானத்திட்டத்தின் கீழ் ரூபா 23,228,097 பெறுமதியான 560 நன்னீர் படகுகள் போட்டி விலைக் கோரல் இன்றி கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (ஆ) ஆம் வழிகாட்டலின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கைக்கு

உள்ளாகாது அரச கம்பனி ஒன்றிடமிருந்து படகுகள் கொள்வனவு செய்யப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அரசாங்கக் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 (1) ஆம் வழிகாட்டலுக்கு முரணாக ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய முற்பண பிணைப்பொறுப்பு பெற்றுக்கொள்ளப்படாது ரூபா 10,949,240 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது.

ii. நன்னீர் படகுகள் மாவட்டச் செயற்திட்டக் காரியாலயத்திற்குக் கொண்டு செல்லப்படுவதற்காக அங்கீகாரம் இன்றி ரூபா 809,249 தொகை அரச கம்பனி ஒன்றிற்குச் செலுத்தப்பட்டிருந்தது. 560 நன்னீர் படகுகள் பொது மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமையையோ அல்லது அவர்கள் பொறுப்பேற்றமையையோ உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூலச் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 03 போயாக்கள் பொருத்தப்படுவதற்கான முற்பணக் கொடுப்பனவு
------------------------------------------------------------

காலி, கதலுவ மீன்பிடித் தடாகத்திற்கு இருகாமையில் கடல் மார்க்கத்தடைகள் உள்ள பகுதிகளைக் குறிப்பிடுவதற்காக போயா 03 பொருத்துவதற்கு அரச கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 925,750 தொகையான முற்பணத்தில் தொகை ரூபா 40,197 தீர்க்கப்பட்டிராததுடன் அச் செயற்பாடு முறைப்படி பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

**1.10 நட்டங்களும் இழப்புகளும்**
------------------------------------------------------------

தெரிவுக் கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட நட்டங்களும் இழப்புகளும் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறாகும்.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது அமைச்சின் 11 வாகனங்கள் விபத்திற்கு உட்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் நடடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ் வாகனங்கள்

தொடர்பான கோவைகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைச்சால் பேணப்பட்டுவந்த நட்டங்கள் மற்றும் இழப்புகளுக்கான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் 2012 ஆம் ஆண்டின் போது அதில் எவ்வித பதிவுகளும் இடம்பெற்றிருக்கவில்லை.

### 1.11 முகாமைத்துவ நலிவுகள்

அமைச்சிற்கு உரித்தான 02 வாகனங்கள் திருத்தப்பட்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படுவதற்கோ அல்லது கைதவிர்க்கப்படுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்படாது 04 ஆண்டுகளுக்கு மேலான காலமாக விளைவற்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன.

### 1.12 மனித வள முகாமைத்துவம்

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 22 | 13 | 09 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 04 | 03 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 106 | 63 | 43 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 53 | 50 | 03 | - |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/(ஒப்பந்த அடிப்படை) | 01 | 02 | - | 01 |
| | மொத்தம் | 186 | 131 | 56 | 01 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 56 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களுக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் ஆரம்ப நிலையில் உள்ள இரண்டு ஊழியர்களை கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் சேவைகளுக்காக 2010 யூலை 08 ஆம் திகதி முதல் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

**(இ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மனித வளங்கள்**

அமைச்சினால் அரசாங்க நியதிச்சட்ட கூட்டுத்தாபனத்தில் இரண்டாம் நிலை உத்தியோகத்தர் 2009 ஏப்ரல் 07 ஆம் திகதி முதல் அமைச்சு கடமைகளுக்காக முறையற்ற விதத்தில் பெறப்பட்டிருந்தார்.

**ஒதுக்கீட்டுத் தலைப்பு 290 – கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்**

**2.1 கணக்காய்வின் நோக்கெல்லை**

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆம் திகதி திணைக்களத் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம்மீளாய்வினதும் செவ்வைப்பார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர்

ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தெடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக் கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல் அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புகள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு, இணக்கக்கூற்றுக்கள் இங்கே (அ) இலிருந்து (ஊ) வரையான அவதானிப்புக்கள் மற்றும் கீழே 2.4 இலிருந்து 2.8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை**

ரூபா 2,269,400 பெறுமதியான 18 கணனிகளும் 09 அச்சீட்டு இயந்திரங்களும் 2010 திசெம்பர் 30 ஆம் திகதி முதல் 2012 ஏப்ரல் 26 ஆம் திகதி வரையான காலப்பகுதியின் போது கொள்வனவு

செய்யப்பட்டிருந்த போதிலும் 2012 நவம்பர் 28 ஆம் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை 02 ஆம் பந்தியின் பிரகாரம் கணனிச் சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிராததுடன் சுற்றறிக்கையின் 03, 04 ஆம் 06 ஆம் பந்தியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

(i) 01 செலவின விடயத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 3,200,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 04 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்துக் காணப்பட்ட சேமிப்பு அச் செலவின விடயங்களுக்கு உரித்தான தேறிய தேறிய ஏற்பாட்டின் 35 சதவீதத்திற்கும் 81 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சளவைக் கொண்டிருந்தது.

(iii) வீட்டுத் தளபாடங்கள் மற்றும் காரியாலய உபகரணங்களின் கொள்வனவிற்காக செலவின விடயங்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஏற்பாடு போதாதிருந்தமையால் ரூபா 3,000,000 தொகையான ஏற்பாடு நிதிப் பிரமாணம் 66 இன் படி மாற்றப்பட்டிருந்த போதிலும் இதில் ரூபா 137,961 தொகை அதாவது 5 சதவீதம் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது.

(iv) 07 செலவின விடயங்களுக்காக குறை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நிதிப் பிரமாணம் 66 இன் பிரகாரம் வேறு செலவின விடயங்களிலிருந்து ஏற்பாடுகள் மாற்றப்பட்டிருந்ததுடன் இது நிதி மதிப்பீட்டின் 44 சதவீதத்திலிருந்து 150 சதவீதம் வரையான வீச்சிலான அளவைக் கொண்டிருந்தது.

**(இ) பொது வைப்புக் கணக்கு**

(i) 2 ஆண்டுகள் கடந்திருந்த ரூபா 749,138 தொகையான 15 வைப்புகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) திணைக்களத்தால் ரூபா 38,179,185 தொகை செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு பொது வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்த போதிலும் இதற்காக நிதிப் பிரமாணம் 215(3) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் திறைசேரி அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) வருமானக் கணக்குகள்**

(i) நிலையான சான்றிதழ் வழங்குதல், மீன் பதனீட்டு நிலையம் பதிவுசெய்தல், படகுகளைப் பதிவு செய்தல், கடல் அட்டைகளை ஏற்றுமதி செய்தல் போன்ற செயற்பாடுகளுக்காக 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 6,000,000 தொகையான வருமானம் மதிப்பிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,504,500 தொகையானதுடன் முன்னைய ஆண்டிற்கான வருமான மதிப்பிடப்பட்டிராத போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 4,951,420 தொகையாகக் காணப்பட்டது. இதன் படி, முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 424,620 தொகையால் குறைவடைந்திருந்தது.

(ii) வருமான மூலங்களுக்கிடையே மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,000 தொகையான மாற்றம் வருமான மீளளிப்பாகக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(iii) அனுமதிப்பத்திரக் கட்டணம் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை மதிப்பிடப்பட்டு திருத்தம் செய்யப்பட வேண்டிய போதிலும்

மீன்பிடிச் செயற்பாடுகளுக்கான வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் அவ்வாறு திருத்தப்பட்டிராததுடன் 1996 ஆம் ஆண்டின் போது தீர்மானிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரக் கட்டணம் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட்டிருந்தது.

**(உ) வெகுமதி நிதியக் கணக்கு**

1996 இன் 02 ஆம் இலக்க மீன்பிடி மற்றும் நீரியல வள அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் மீனவர்களால் கடலில் மேற்கொள்ளப்படும் தவறுகள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படுவதற்கும் கைப்பற்றப்பட்ட மீன்கள் மற்றும் தடைசெய்யப்படாத பொருட்கள், ஏலவிற்பனை செய்யப்பட்டு பெறப்படும் பணம் வெகுமதி நிதியத்திற்கு செலவு வைப்பதற்கும் அப் பணம் சுற்றிவளைப்பில் பங்கேற்ற நபர்களுக்கு பரிசுத் தொகை வழங்கப்படுவதற்கும் தேவையான ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) வருமானமாக ரூபா 1,002,425 தொகை நிதியத்தில் நிலவிய போதிலும் சுற்றிவளைப்பில் ஈடுபட்டவர்களுக்கு வெகுமதியாக எவ்வித தொகையும் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது மீன் விற்பனையின் மூலம் சேகரிக்கப்பட்ட நீதிமன்றத்தில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 117,580 தொகையான வருமானம் நீதிமன்றத்திடமிருந்து பெறப்பட்டு வெகுமதி நிதியத்திற்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) நிதியத்தின் பெறுவனவுகளும் பெறவேண்டிய வருமானங்களும் வெவ்வேறாக இனங்காணக்கூடிய வகையில் புத்தகங்களும் பதிவேடுகளும் பேணப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்**

(i) 29001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக்கூற்றுக்களின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 2,624,991 ஆனதுடன் அந்த நிலுவை மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலையில் காணப்பட்டது.

(ii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.1 ஆம் 4.2 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஓய்வுபெறுவதற்குள்ள ஓர் உத்தியோகத்தர் ஓய்வு பெறுவதற்கு முன்னர் கடன் தொகையை மீள அறவிடுவதற்கு இடமளிக்கும் வகையில் அவ் உத்தியோகத்தரின் விருப்பின் படி குறித்த தவணைகளிலும் பார்க்க குறைவான தவணைகளில் அறவிட்டுக்கொள்வதற்கோ அல்லது மாற்றப்பட்ட ஓய்வூதிய சம்பளத்திலிருந்து அறவிட்டுக்கொள்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் இருவரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 46,669 தொகையான கடன் மீதி நிலுவையாகக் காணப்பட்டன.

(iii) தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4.1 ஆம் 4.5 ஆம் உப பிரிவுகளின் பிரகாரம் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய பணம் பிரதான கடன்படுனரிடமிருந்து அறவிடப்பட முடியாதிருந்த சந்தர்ப்பங்களின் போது அவர் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டியதாக நிர்ணயிக்கப்பட்டுள்ள நடைமுறைகள் பிணையாளி தொடர்பாகவும் பின்பற்றப்பட்டு கடன் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 505,302 தொகையான கடன் மீதி தொடர்பாக

அவ் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**2.4.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402(1) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஓர் பிரதியுடன் நிதியாண்டு பூர்த்தியடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு உரித்தான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 15 ஆம் திகதியில் உள்ளவாறும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4.2 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தால் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**(அ) தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள்**

திணைக்களத்தால் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்த்துவைக்கப்படாத பொறுப்புக்கள் ரூபா 33,936,771 ஆகக் காணப்பட்டது. நிதிப் பிரமாணம் 94(1) இற்கு முரணாக ஓர் செலவின விடயத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,750,000 தொகையான ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து சேமிப்பை விஞ்சி ரூபா 1,750,019 தொகையான பொறுப்புகள் ஏற்பட்டிருந்தன.

**(ஆ) சொத்து முகாமைத்துவம்**

உணவு மற்றும் கமத்தொழில் அமைப்பொன்றிடமிருந்து திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ஜீப் வண்டியின் பெறுமதியும் ஜீப் வண்டி கையேற்கப்படுகையில் செலுத்தப்பட்ட சுங்க வரித் தொகையான ரூபா 1,076,482 தொகையுமான சொத்துக்கள் கணக்குகளிலிருந்து கைவிடப்பட்டிருந்தன.

## 2.6 செயற்திட்ட அமுலாக்கலிலான நலிவுகள்

செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்படல், செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாது கைவிடப்படல் மற்றும் செயற்திட்டத் தாமதங்கள் தொடர்பான தெரிவுக் கணக்காய்வுகளின் போது கண்டறியப்பட்ட சந்தர்ப்பங்கள் பின்வருமாறாகும்

**மாவட்ட மீன்பிடி கூட்டுறவு சங்க அங்கத்தவர்களுக்காக சுழற்சிக் கடன் நிதிய முறைமை ஒன்று தாபிக்கப்படல்**

மாவட்ட மீன்பிடி கூட்டுறவு சங்க அங்கத்தவர்களுக்கு வருமானம் உழைக்கும் செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக சுழற்சிக் கடன் நிதிய செயற்திட்ட முறைமை ஒன்றை ஸ்தாபிக்கப்படுவதற்காக 2009 ஆம் 2010 ஆம் ஆண்டுகளின் போது 07 மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபா 4,050,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. இதன் கீழ் நலன்பெறுனர்களிடமிருந்து மீள அறவிடப்பட்ட கடன் தவணைப்பணம் மீளக் கடன் வழங்கப்படுவதற்காகப் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு கடன் வழங்கப்படாது 5 மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உரித்தான ரூபா 2,416,563 தொகை கணக்குகளில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 2009 திசெம்பர் 10 ஆம் திகதிய 01.∴2009 ஆம் இலக்க திணைக்களச் சுற்றறிக்கையின் 5.2 ஆம் பந்தியின் பிரகாரம் 07 மாவட்டக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கடன் வழங்கப்படுவது தொடர்பாக மாதாந்த முன்னேற்ற அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.7 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

**திவிநெகும மீன்பிடி பின்அறுவடை தொழிநுட்ப செயற்திட்டக் கடன் தீர்மானத்திட்டம்**

திவிநெகும மீன்பிடி பின்அறுவடை தொழிநுட்பக் கடன் தீர்மானத்திட்டம் சுழற்சிக் கடன் நிதியமாக செயற்பட்டிருந்தது. தொழிநுட்பக் கடன் அடிப்படையில் ஒரு நலனாளிக்கு ரூபா 10,000 வழங்குவதற்காக பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் வழங்கப்பட்ட தொகையில் 2012 யூன் 12 ஆம் திகதி ரூபா 26.75 மில்லியன் இலங்கை வங்கி தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இவ் வைப்புத் தொடர்பாக முறையான அதிகாரப் பொறுப்பு, நிதிப் பிரமாணம் 382 இன் பிரகாரம் வைப்புச் செய்யப்பட்ட பணத்திற்காக உறுதிப்படுத்தல் சான்றிதழொன்று வங்கியால் வழங்கப்பட்டிராததுடன் அத் தொகைக்காக உரித்தாக வேண்டிய வட்டி வருமானம் தொடர்பான உடன்பாடும் பெறப்பட்டிருக்கவில்லை.

**2.8 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியும் உள்ளபடியான பதவியணியும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான விபரம் பின்வருமாறாகும்.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உள்ளபடியான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 48 | 25 | 23 |
| (ii) | மூன்றாம் நிலை | 15 | 08 | 07 |
| (iii) | இரண்டாம் நிலை | 647 | 408 | 239 |
| (iv) | ஆரம்ப நிலை | 107 | 95 | 12 |
| (v) | ஏனையவை (அமையம்/ தற்காலிகம்/(ஒப்பந்த அடிப்படை) | 01 | 01 | - |
| | மொத்தம் | 818 | 537 | 281 |

மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு 281 வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.